செ.வெ. எண்: 142 நாள் : 14.02.2011.

# சமையல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கென "தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம்" அமைத்து முதலமைச்சர் கலைஞர் ஆணை!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கீழ் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கென 16 நலவாரியங்களை உருவாக்கி, அவற்றின் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளைச் செவ்வனே வழங்கி வருகிறது.

இந்நிலையில், தமிழகத்தில் சமையல் கலையைத் தொழிலாகக் கொண்டுள்ள தொழிலாளர்களுக்கென தனியே ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசீலித்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் – (Tamil Nadu Cooking Workers Welfare Board)" எனும் ஒரு நல வாரியத்தை அமைத்திட இன்று (14–2–2011) ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.